இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அன்னியனுக்கு நீ தொல்லை கொடுக்காதே! அவனைக் கொடுமைப் படுத்தாதே. ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராய் இருந்தீர்கள். விதவை, அனாதை யாருக்கும் நீ தீங்கிழைக்காதே. நீ அவர்களுக்குக் கடுமையாகத் தீங்கிழைத்து அவர்கள் என்னை நோக்கி அழுது முறையிட்டால், நான் அவர்கள் அழுகுரலுக்குச் செவிசாய்ப்பேன். மேலும் என் சினம் பற்றியெரியும். நான் உங்களை என் வாளுக்கு இரையாக்குவேன். இதனால் உங்கள் மனைவியர் விதவைகளாவர். உங்கள் பிள்ளைகள் தந்தையற்றோர் ஆவர். உங்களோடிருக்கும் என் மக்களில் ஏழை ஒருவருக்கு நீ பணம் கடன் கொடுப்பாயானால், நீ அவர்மேல் ஈட்டிக்காரன் ஆகாதே. அவரிடம் வட்டி வாங்காதே. (வி.ப.22: 21-24)

# புனித பூமியின் அமைதிக்காக இறைவேண்டலில் ஒன்றிணைவோம்!

## திருத்தந்தை அழைப்புவிடுத்தார்

வத்திக்கான்: புனித பூமியின் அமைதிக்காக அத்தலத் திருஅவையுடன் அனைவரும் ஜெபத்திலும் உண்ணா நோன்பிலும் ஒன்றிணைவோம் என அழைப்புவிடுத்துள் ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த அக்டோபர் 17ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று, புனித பூமி தலத்திருஅவை, அமைதிக்கான இறை வேண்டல் மற்றும் உண்ணா நோன்பு நாளை கடைபிடிப்பதை முன்னிட்டு அதே நாளில் நாமும் ஒன்றிணைய வேண்டும் என அந்நாளில் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் அழைப்பு விடுத்திருக்கும் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், பிணையக் கைதிகள் விடுவிக்கப் பட வேண்டும், மோதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருக்க வேண்டும், மனிதாபிமானச் சட்டங்கள் மதிக்கப்பட வேண்டும், அப்பாவி மக்களின் இரத்தம் சிந்தப்படாமலிருக்க வேண்டும் என மேலும் அதில் விண்ணப்பித்துள்ளார்.




மேலும், அக்டோபர் 17ஆம் தேதி, கடந்த செவ்வாய்க்கிழமையன்று திருப்பீடம், திருத் தந்தையின் நவம்பர் மாத திருப்பலிக் கொண்டாட்டங்கள் குறித்த விவரங்களை வெளியிட்டுள்ளது.


நவம்பர் 2ஆம் தேதி அனைத்து ஆன்மாக்கள் நினைவு நாளை யொட்டி, உரோம் நகரின் போர் வீரர்களின் கல்லறையில் காலைத் திருப்பலியை நிறைவேற்ற உள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 3ஆம் தேதி வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில், திருஅவையில் கடந்த ஓராண்டு காலத்தில் உயிரிழந்த திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட், கர்தினால்கள், ஆயர்கள் ஆகியோரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலியை நிறைவேற்றுவார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 19ஆம் தேதி, உலக வறியோர் நாளையொட்டி வத்திக் கான் புனித பேதுரு பெருங் கோவிலில் ஏழை எளியோரோடு திருப்பலி நிறைவேற்ற உள்ளார் திருத்தந்தை.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

# கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி பேரவை




1976-மறுமலர்ச்சி எனும் பொருள்கொண்ட ‘அர்ஹினாமெந்தோ’ தியான பேரவை பினாங்கில் ஒரு மாதக் காலம் நடைபெற்றது. அனைத்து ஆயர்களும் அருள்பணியாளர்களும் இத்தூய பேரவை யில் கலந்து கொண்டு மலேசிய திருஅவைக்கான செயல் திட்டத்தை வகுத்தனர்.

1. திருஅவைக்குள் ஒற்றுமை
2. தொடர் உருவாக்கப் பயிற்சி
3. பிற சமயத்தாருடனான கலந்துரையாடல்
4. முழு மனித வளர்ச்சி

என நான்கு தீர்மானங்களை முன்வைத் தனர். பங்குகளை அடிப்படை திருஅவை சமூகங்களாகப் பிரித்து இறை மக்களைக் கட்டியெழுப்பும் பணி முடக்கிவிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, ஒவ்வொரு பத்து ஆண்டும் தீபகற்ப மலேசிய மேய்ப்புபணி மாநாடு 1986, 1996, 2006 மற்றும் 2016 என நடத்தப்பட்டு மறு ஆய்வுகள் செய்யப் பட்டன.

இந்த வரிசையில் எதிர்வரும் 2026-ல் அடுத்த மாநாடு நடத்தப்ப்டவுள்ளது. ஆனால், இம்முறை தீபகற்ப மலேசியா என்றில்லாமல், சபா மற்றும் சரவாக்கும் தீபகற்ப மலேசிய மறைமவட்டங்களோடு இணைந்து ‘மலேசிய மேயப்புப்பணி மாநாடு’ எனும் குடையின் கீழ் ஆயர்களும், அருள்பணியாளர்களும், துறவற சபை யினரும் பொதுநிலையினரும் கூடவுள்ள னர்.

தூய ஆவியாரின் உந்துதலிலும் வழிகாட்டுதலிலும் இயங்கிக் கொண்டிருக் கும் நாம், இடையிடையே நமது பயணப் பாதையை ஆய்வுசெய்வது இன்றியமை யாதது. இது அந்த மறைமாவட்ட ரீதியில் நடைபெறும்.

### கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாடு

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் 2016க்கும் 2026க்குமான இடைப்பட்ட ஐந்தாண்டு பயணத்தையொட்டி ஆய்வு செய்யவும் தெளிவுப்பெறவும் கடந்த 14 அக்டோபர் 2023 அன்று மையத் தவணை மீள்பார்வை பேரவை நடைபெற்றது.

செராஸ், புனித பிரான்சிஸ் அசிசியார் பங்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்த அரை தவணை ஆய்வுப் பேரவையில் பேராயர் உட்பட அருள்பணியாளர்கள், துறவற



அருட்சகோதர சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் ஒன்றுகூடி கலந்துரை யாடலில் ஈடுபட்டனர். ‘திருஅவையை மீண்டும் கட்டியெழுப்புவோம்’ எனும் தலைப்பில் அடுத்து வரும் காலத்தில் நான்கு முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்த அழைக்கப்பட்டுள்ளோம். அவை: 1. குடும்பம் 2. திருஅவை 3. சுற்றுச்சூழல் 4. சமூகம்.




இந்த ஒருநாள பேரவையில் மலேசியா வுக்கான திருத்தூது பிரதிநிதியான Archbishop Wojciech Zaluski, (Apostolic Nuncio) அவர்களும், மலேசியா ஆர்த்தரடோக்ஸ் சிரியா திருஅவையின் மதிப்புகுரிய பிலிப்பு தோமஸ், மலேசிய கிறிஸ்தவ சபைகளின் தலைவர்

*-தொடர்ச்சி அடுத்துப் பக்கம்*

# கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மேய்ப்புப்பணி பேரவை 2023

*(முதல் பக்கத் தொடர்ச்சி*

திரு டான் கொக் பெங், செயலாலர், மலேசிய கூட்டரசு திருஅவை தலைவர் ஆயர் T. ஜெயகுமார், மலேசிய இந்து சங்கத்தின் பிரதிநிதிகளாக K.மாணிக்க வாசகம், V. ராஜூ, மற்றும் புத்த சமயத் பிரதிநிதிகளும், மலேசிய மேய்ப்புப்பணி கழகத்தின் தலைவரான, பினாங்கு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை ஊஊட் மிராண்ட ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இந்த மாநாட்டில், அருள்தந்தை ஜெரார்ட் திரவியம் அவர்களின் தலைமைத்து வத்தையொட்டிய சொற்பொழிவு அமர்வும் இடம்பெற்றது. அதில், 'எங்கே எதை நோக்கிப் பநணிக்கிறோம் என்பதை அறிதல் வேண்டுத், இல்லையேல் திக்குத்தெரியாமல் தொலலைந்து விடுவோம்' என்றும், இறைவேண்டலில் தூய ஆவியாரின் வழிகாட்டுதலுக்குச் செவிமடுக்காவிடில், அனைத்தும் வீண் என்று முடித்தார்.

**மேய்ப்புப்பணி மாநாட்டில் பங்கேற்ற சிலரின் கருத்துப் பகிர்வு**

**அருள்தந்தை விண்சன்ட் தொமஸ்**

2016-ல் நானகாவது தீபகற்ப மலேசியா மேய்ப்புப்பணி மாநாடு நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக அடுத்த மாநாடு எதிர்வரும் 2026-ல் நடைபெற ஏற்பாடுகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. மேலும் 2026-ல் முதன் முறையாக கிழக்கு மலேசியா திருஅவையும் மேற்கு மலேசியாவோடு இணைக்கிறது. எனவே, இம்முறை இந்த மாநாடு மலேசிய திருஅவையின் மேய்ப்புப்ணி மாநாடு என அழைக்கப் படவுள்ளது.

இதில், குடும்பம், திருஅவை, சுற்றுச் சூழல் மற்றும் சமூகம் ஆகிய நான்கு அம்சங்களில் கவனம் செலுத்தவுள்ளோம். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட எனக்கு, எனது பங்கில் இந்த நான்கு



அம்சங்களையும் அடுத்துவரும் ஏறக்குறைய மூன்றாண்டு களுக்குத் திட்டமிட்டு செயல்பட எனக்கு ஒரு விழிப்புணர்வை அளித்தது.

**சகோ. பிரான்சிஸ் தோமஸ் (பூச்சோங்)**

"திருஅவையை மீண்டும் கட்டியெழுப்பு வோம்' என்ற கருபொருளில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற கோலாலம்பூரர் மாமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இம்முறை இளையோரின் பங்கெடுப்பு அதிகமாகக் காணப்பட்டது.



குடும்பம், திருஅவை, சுற்றுச் சூழல் மற்றும் சமூகம் ஆகிய அம்சங்களில் பார்த்தல், தீர்ப்பிடுதல், செயல்படுதல் எனும் மூன்று கோணங் களிலும் குழுகள் வாரியாக ஆய்வுகள் செய்தோம். இறைமக்க ளிடையே தொடர்ச் சியான தலைமைத்துவம் ஏற்படுத்த வேண்டும் என்பது உணரப்பட்டது. பங்குகளில் அருள்பணியாளரோடு இணைந்து பொதுநிலையினரும் தோள் கொடுத்து பயணிக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. இறுதியாகக் கொண்டா டப்பட்ட திருப்பலியுல் பிற சமயத்தவரும் கலந்துகொண்டது மாநாட்டிற்கு சிறப்பு சேர்த்ததது

**Msgr தனிஸ்லாஸ் சூசைமரியாம்**

சமீபத்தில் நடந்து நிறைவடைந்த மாமறை மாவட்ட மேய்ப்புப்பணி மாடானது, நமது மாமறை திருஅவைக்கு ஒரு மாபெரும் உருமாற்றத்தை கொண்டுவரும் என்பதில் மாற்று கருத்தில்லை. இம்மாநாட்டின் நடவடிக்கைகளை படித்திருப்பீர்கள் என்று பெரிதும் நம்புகிறேன். நான் இம்மாநாட்டில் கண்டது, உணர்ந்தது மற்றும் மகிழ்ந்தது என்னவெனில் வழக்கத்திற்கு மாறாக பங்கெடுத்தோர் பெண்களும் இளை யோரும் ஆவர். இவர்களில் 99./. புதியவரகள். நம்முடைய பங்குகளில்



எல்லா பணிக்குழுக்களிலும் அதிசக்களிலும் பங்கெடுப்போர் பெண்கள் என்றால் மறுப்போரில்லை. எனவே இம்மாநாட்டின் பரிந்துரைகள் அனைத்தும் அடுத்த பத்தாண்டுகளுக்கு சிறப்பாக வழிநடத்திடும் என்பது என் ஆழமான கருத்தாகும்.

*செய்தி தொகுப்பு : ஆர்.கே.*

## காஜாங்கில் பாராட்டு சான்றியல் வழங்கப்பட்டது

**காஜாங்:** இங்கு அமைந்துள்ள திருக் குடும்ப ஆலயத்தின் தமிழ்த் திருவிவிலியப் பணிக்குழு, 2023ம் ஆண்டு விவிலியப் பாடத்தை வெற்றிகரமாக நடத்தி, கடந்த 15 அக்டோபர் அன்று 41 பேருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கியது. 9-மாத விவிலிய வகுப்பில், விவிலியத்தின் முதல் இரண்டு புத்தங்களான தொடக்க நூலும் விடுதலைப்பயண நூலும் போதிக்கப்பட்டன.

திருவிவிலியப் பணிக்குழுவைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் பங்குத் துணை தந்தை போனவெஞ்சர் இராயப்பன் அவர்களும் இணைந்து பாடத்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 5.00 முதல் இரவு 7.00 வரை இவ்வகுப்பு நடத்தப்பட்டு வந்தது. முழுமையாகப் பங்கேற்ற 41 பேருக்குப் பங்குத்தந்தை மைக்கல் சுவா அவர்கள் பாராட்டுச் சான்றிதழ்களை எடுத்து வழங்கினார்.

அந்நிகழ்ச்சியின் போது எதிர்வரும் நவம்பர் மாதம் குருத்துவ அருள்பொழ்வு பெறவிருக்கும் திருத்தொண்டர் ஞான செல்வம் பிரான்சிஸ் அவர்களின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றது. திருவிவி லியப் பணிக்குழுவோடு பயணம் செய்து பேருதவி புரிந்த எங்கள் துணை அருள் பணியாளர் போனாவெஞ்சர் இராயப் பன் அவர்களுக்குக் குழுவினர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். அன்று இறுதி



யில், இரவு உணவும் வழங்கப்பட்டதோடு, இப்பயிற்சியின் தொடர்ச்சி அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட திட்ட மிடப்படுள்ளதாக செயலாளர் அறிவித்தார்.

*-அந்தாணி இன்னாசி, காஜாங்*

# அன்புடையார் உயிராலும் உடலாலும் உரியர் பிறர்க்கு!

**இன்று ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறுவில் இணைந்துள்ள நாம்** அந்நியரை அன்பு செய்ய மறக்க கூடாது. தன்னை நேசிப்பது போல நாம் மற்றவர்களை நேசிக்க கடமைப்பட்டு இருக்கின்றோம் என அறிவுறுத்தப்படுகி றோம். இது கட்டளை. அவர்களை கொடுமைப்படுத்தும் போது, அவர்களது குரலைக் கேட்கும் கடவுள் அவர்களுக்காக செயல்படுவதாக வாக்கு தந்துள்ளார் என்பதை நினைவில் கொள்வோம்..

விடுதலைப் பயண நூலிலிருந்து எடுக்கப் பட்ட இன்றைய முதல் வாசகத்தில், அன்னியரை, கைம்பெண்களை, ஆதரவற் றோரை கொடுமைப்படுத்தாதே, அவர் களிடம் வட்டிவாங்காதே, மேலாடையை வாங்கினால் அதைக் கதிரவன் மறையும் முன்பே திருப்பிக் கொடுத்துவிடு என்று படிக்கின்றோம். இது அடுத்திருப்பவரை அன்புசெய்வதற்கான ஒரு வழிமுறையாகும். பிறர் நமக்கு செய்யக்கூடாததை, நாம் பிறருக்குச் செய்யலாகாது. இதுவே உயர்வான கட்டளை என்பார். (மத் 7:12)) .

கடவுளை அன்புசெய்வது என்பது வெறுமனே இறைவேண்டல்களை இடைவிடாது சொல்லிக்கொண்டிருந்தல் மட்டும் போதாது. அதைவிட மேலாது, சக மனிதரை அன்பு செய்வதாகும்.

புனித பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து எடுக்கப் பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில், தெசலோனிக்க மக்கள் எப்படி சிலை வழிபாட்டை செய்துவிட்டு, அதன்பிறகு உண்மையை உணர்ந்து உண்மைக் கடவுளை எப்படி வழிபடுகிறார்கள் என்று கூறக் கேட்கின்றோம்.

நற்செய்தி வாசகத்தில் திருச்சட்ட அறிஞர், "திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?" என்று கேட்கிறார். அதற்கு இயேசு, "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து' இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை. 'உன்மீது நீ அன்புகூர்வதுபோல, உனக்கு அடுத்திருப்ப வர்மீதும் அன்புகூர்வாயாக' என்பது இதற்கு இணையான கட்டளை என்கிறார். அதாவது இயேசுவைப் பொறுத்தளவில் கடவுளை முழுமையாக அன்பு செய்வதும், அதற்கு இணையாக அடுத்திருப்பவரை முழுமையாக அன்பு செய்வதுதான் தலைசிறந்த கட்டளை ஆகும்.

கடவுளை எப்படி அன்புசெய்வது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இறை வார்த்தை சொல்கிறது 'முழு இதயத் தோடும், முழு உள்ளத்தோடும் முழு மனதோடும் அன்பு செய்யவேண்டும்' என்று. அதாவது இறைவனை அன்பு செய்வதில் முழுமை இருக்க வேண்டும், அரைகுறை மனத்தோடு கடவுளை அன்பு செய்வது முழுமையான அன்பாக இருக்காது, அது சிலை வழிபாட்டிற்குச் சமமாகும்.

ஆம், நாம் ஒவ்வொருவரும் கடவுளைத் தவிர்த்து வேறு எதையுமே குறிப்பாக பணம், பொருள் இவற்றை வழிபடுவதை விட்டுவிட்டு உண்மைக் கடவுளை வழிபடுவோம். அதுதான் நாம் கடவுளை முழுமையாக அன்புசெய்கிறோம் என்று அர்த்தமாகும்.

"கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தாம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யரா வோம். ஆகவே, அடுத்தவரை அன்பு செய்யாமல் கடவுளை அன்புசெய்கிறேன் என்று சொல்வது பொருளற்றதாகும்.

விவேகானந்தார் ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார், "கடவுளை அடைய வேண்டுமா?, மனிதர்களை அன்புசெய்யுங் கள்" என்று. நாமும் உணர்வுப்பூர்வ மாகப் பங்கேற்று அன்பில் நிறைவடை வோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**ஆண்டின் பொதுக்காலம் 30 ம்-ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | விப 22: 21-27 |
| தி.பா | 18: 1-2a. 2bc-3,46,50 |
| 2-ம் வாசகம் | 1 தெச 1: 5c-10 |
| நற்செய்தி | மத் 22: 34-40**ஞாயிறு** |
| **வாசகம் ஆண்டு 1** | **வாரநாள்** |
| **முதல் வாசகம் -ஆண்டு 1** | |
| **திருப்புகழ் மாலை- வாரம் 1** | |